(6) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஈ) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, "1975 ஆம் ஆண்டு டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

---

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"1975-ஆம் ஆண்டு டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறு வனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) சட்டமாக நிறை வேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர் களே,

"1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டங்கள் வெளியார் உதவியின்றி மாநில அரசின் நிதிகளைக் கொண்டே நிறைவேற்றப் பட்டு வருகின்றன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டங்களுக்கான நிதிவாயில்களைத் திரட்டிட, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் (காலி நிலம் உட்பட) குடியிருப்புக்காகவும், குடியிருப்புக்கு அல்லாத நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிற நிலங்களுக்கு வெவ் வேறு படித்தரங்களில் வரி விதிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு வரி விதிப்பதன் வாயிலாகக் கிட்டும் கூடுதல் வரித் தொகையை குடிசை மாற்றுப் பணிகளுக்காகவும், மறு வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டங்களுக்காகவும் செல விட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மற்றும், சென்னை

---

* 31—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.